# OUR LADY OF FATIMA TAMIL CHAPLAINCY
## புனித பற்றிமா அன்னை தமிழ் ஆன்மீக பணியகம்

131 Birchmount Rd, Scarborough, ON M1N 3J7

olftamilchaplaincy@gmail.com +1 (647) 283 1972 www.olftamilchaplaincy.org

06-10-2021

**அனைவருக்கும் வணக்கம்!**

அன்பார்ந்த இறைமக்களே,

நீங்கள் அறிந்த படி புனித பற்றிமா அன்னை தமிழ் ஆன்மீக பணியம் ஆரம்பமாகி முதல் திருப்பலியை 06-13-2021 ஞாயிற்றுக்கிழமையன்று விண்வெளிகளின் அரசி ஆலயத்தில் (Our Lady of the Airways) ஒப்புக்கொடுக்விருக்கின்றோம்.

இத்திருப்பலிக்கு வரும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய சில விடயங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

1. கோவிட் 19 பகுதி 1 இன் தளர்வுக்கமைவாக 15 வீதமானவர்களின் (ஆகக்கூடியது 150 பேரின்) பங்களிப்போடு கோவிட் 19 விதிமுறைகளோடு மதியம் 2:00 மணி இடம்பெறும்.

2. திருப்பலி ஆயத்தமாவதற்கு 5 நிமிடங்களுக்கு முன் ஆலயக் கதவுகள் மூடப்படும்.

3. காணிக்கை போடும் போது ஆரம்பத்தில் நீங்கள் அன்பளிப்பு உறைகளை நீங்கள் வீட்டிலிருந்து எடுத்துவரும்படி கேட்டுக்கொள்கிறேன். ஆதில் உங்கள் பெயர், விலாசம், தொலைபேசி எண் என்பவற்றை எழுதும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அது உங்கள் அன்பளிப்புளை பதிவு செய்வதற்கு உதவியாக இருக்கும். ஓவ்வொரு குடும்பங்களுக்குமான அன்பளிப்பு உறைகளை ஆயத்தம் செய்துகொண்டு இருக்கிறேன். பின்னா் உங்களுக்கு வழங்கப்படும்.

4. உங்களுடைய குடும்பங்களை எமது தமிழ் ஆன்மீக பணியத்தில் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப்படிவத்தை திருப்பலி முடிந்து செல்லும் போது நீங்கள் பெற்றுக்கெள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்படும்.

ஏனைய விடயங்கள் தொடர்ந்து உங்களுக்கு தெரியப்படுத்தப்படும்.

புனித பற்றிமா அன்னையின் பரிந்துரை என்றும் உங்களனைவரோடும் இருப்பதாக!

நன்றி
உண்மையுள்ள,

அருட்தந்தை. கை. பீ. கனிசியஸ் ராஜ்
பரிபாலகர்